


நெல்லை மாநகராட்சி மைய அலுவலக இராஜாஜி மண்டபத்தில் மாமன்ற கூட்டம் மாநகராட்சி மேயர் கோ. ராமகிருஷ்ணன் தலைமையில் மாநகராட்சி ஆணையாளர் மரு.என்.ஓ.சுகபுத்ரா,துணை மேயர் ராஜு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மண்டலத் தலைவர்கள் பிரான்சிஸ்(பாளை)கதிஜா இக் லாம் பாசிலா (மேலப்பாளையம்) ரேவதி (தச்சை) மகேஸ்வரி(நெல்லை) நிலைக்குழு தலைவர்கள் மற் றும் மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி உதவி ஆணையாளர்கள்,மாநகராட்சி அலுவலர்கள்,பணியா ளர்கள் கலந்து கொண்டனர்.

அரியலூர் மாவட்டம்

## தா.பழூர் மேற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்

### தலைமைக் கழக அறிவிப்பு

அரியலூர் மாவட்டம், தா.பழூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் வா.சௌந்தர்ராஜன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **ப.தனவேல்** (தெற்கு தெரு, வெண்மான்கொண்டான் &அஞ்சல், உடையார்பாளையம் வட்டம், அரியலூர் மாவட்டம் 621 804) அவர்கள் தா.பழூர் மேற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 30.09.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 101 வது பிறந்த நாளை முன் னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மருத்துவர் அணி சார்பில் நாகர்கோவில், ராமன்புதூரில் உள்ள கலைஞர் நூலகத்துக்கு ரூபாய் 1 லட்சம் மதிப்பீட்டில் 100 புத்தகங்கள் வழங்கும் நிகழ்ச்சியானது மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் மருத்துவர் சொ.சுரேஷ் தலைமையில் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு புத்தகங்களை பெற்றுக் கொண்டார். நிகழ்ச்சியில் மாவட்ட மருத்துவர் அணி துணை அமைப்பாளர்கள் மருத்துவர்கள் எஸ்.கிங்ஸிலி, பி.சுதாகர், ரஞ்சித், மாவட்ட மருத்துவர் அணி தொகுதி அமைப்பாளர்கள் மருத்துவர்கள் எஸ்.எழில் அரசு, புர்லிங்டன், மாவட்ட மருத்துவர் அணி தொகுதி துணை அமைப்பாளர்கள் மருத்துவர்கள் எம்.சித்ரா, ச.ஹேமலதா, நெ.எட்வின் வில்சன், எம்.அஜி குமார் உட்பட கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# மதுரை வடக்கு மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணிகள்!

## மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி கழகத்தினருக்கு வேண்டுகோள்!



மதுரை, அக்.1

மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2025 தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு தமிழகத்தில் உள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் 29.10.24 அன்று வெளியிட உள்ளது. 29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களை சேர்த்தல், பெயர்கள் நீக்குதல், திருத்தம் செய்யவும் மனு செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 05.30 மணி வரை சிறப்பு முகாம்களும் நடத்தப்பட உள்ளன. இந்த நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 01.01.2025 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்தப் படிவங்களை அந்தந்த முகாம் மையங்களில் கொடுக்க வேண்டும். இதன் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம்பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்துள்ள வாக்காளர்களின் பெயர்களையும், இறந்த வாக்காளர்களின் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் நாட்கள் 29.10.2024 பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 29.10.2024 முதல் 28.11.2024 சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்கள் தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி, ஞாயிறு நாட்களாகும், இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 06.01.2025 ஆகும்.

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ள நாட்களிலும் மதுரை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் இப்பணிகள் குறித்து மேற்கொண்ட நடவடிக்கைகளை மாவட்ட கழகத்திற்கு அவ்வப்போது தெரியப்படுத்துமாறும் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கழகத்தினரிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்திய அரசியல் களத்தில் இளம் தலைமுறைக்கான வாய்ப்புக்கள் பிரகாசமாகின்றன!

# திராவிட அரசியலின் நம்பிக்கை நட்சத்திரமாக உதயநிதி ஸ்டாலின் உருவெடுத்து விட்டார்!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, அக். 1–

இந்திய அரசியல் களத்தில் இளம் தலைமுறைக்கான வாய்ப்புக்கள் பிரகாசமாகின்றன. திராவிட அரசியலின் நம்பிக்கை நட்சத்திரமாக உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உருவெடுத்து விட்டார் என்பதில் பெருமை கொள்வோம் என 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அது வருமாறு

துணை முதல்வராக உதயநிதி ஸ்டாலின் நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார். முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோருக்கு அடுத்தபடியாக தமிழகத்தில் 3வது நபராக உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வராக பொறுப்பேற்றுள்ளார். தனது தந்தையை போலவே உதயநிதி ஸ்டாலினும் படிப்படியாக அரசியல் வாழ்வில் முன்னேறி இப்பதவியை அடைந்துள்ளார் என்பதில் சந்தேகமே இல்லை. இந்திய அரசியலை வழி நடத்துவதற்கு இப்போது இளைஞர்கள் எழுச்சி பெறும் நிலையில், அவர்களுக்கு எல்லாம் உதயநிதி ஸ்டாலின் ஒரு முன்னோடியாக இருப்பார் என உறுதியாக நம்பலாம்.



தினகரன்
செப்டம்பர் 30, 2024 திங்கட்கிழமை
நம்பிக்கை நட்சத்திரம்

2019ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் தொகுதிகள் தோறும் வலம்வந்து திமுகவின் வெற்றிக்கு தோள்கொடுத்தார். 2021 சட்டசபை தேர்தல், 2024 நாடாளுமன்ற தேர்தலிலும் வாக்காளர்கள் மத்தியில் அவரது பிரசாரம் திமுகவிற்கு வலுவூட்டியது. நவீன தொழில் நுட்ப உத்திகளை பயன்படுத்தி, உரையாடல்கள் அடிப்படையிலான அவரது பிரசாரம் பொதுமக்களை கவர்ந்தது.

கடந்த 2021ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் 10 ஆண்டு கால அதிமுகவின் அவல ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைப்பதில், அவரது பங்களிப்பு பாராட்டுக்குரியது. தேர்தல் முடிந்ததும் தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் அவர்களும், அவரோடு 35 அமைச்சர்களும் பொறுப்பேற்றனர். அப்போதே உதயநிதி ஸ்டாலினும் அமைச்சராக பொறுப்பேற்பார் என மக்கள் மத்தியில் எதிர்பார்ப்புகள் அதிகம் நிலவியது. ஆனால் அப்போது நடக்காவிட்டாலும், அடுத்த ஆண்டே அவர் இளைஞர் நலன் மற்றும் விளை யாட்டுத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார். திமுக இளைஞரணி செயலாளர் பதவியில் கிடைத்த அனுபவங்களை கொண்டு, தனது அமைச்சர் பணியை அவர் செவ்வனே செய்தார்.

உலகளாவிய விளை யாட்டுக்களை மும்பையிலும், டெல்லியிலுமே நடத்த முடியும் என்கிற எண்ணங்களை அவர் தொடக்கத்திலேயே துடைத்தெறிந்தார். விளைவு கேலோ இந்தியா, பார்முலா 4 கார் பந்தயம் உள்ளிட்ட பல்வேறு சர்வதேச தரத்திலான விளையாட்டுக்கள் சென்னையில் நடந்தேறின. ஆசிய ஹாக்கி போட்டிகள், ஸ்குவாஷ் உலக கோப்பை போன்றவற்றை தமிழகத்தில் நடத்திக் காட்டினார். விளையாட்டுத்துறையின் பொற்காலம் தொடங்கிவிட்டதை உணர்ந்த தமிழக மக்களும், மூத்த அமைச்சர்களும் கடந்த சில மாதங்களாகவே உதயநிதி ஸ்டாலினை துணை முதல்வராக்க வேண்டும் என்கிற தங்கள் ஆசையை பொதுவெளியில் வாஞ்சையோடு தெரிவிக்கத் தொடங்கினர். அந்த ஆசையும் நேற்று முன்தினம் நிறைவேறிவிட்டது.

துணை முதல்வர் பதவிக்கென அரசியலமைப்பில் தனித்த அதிகாரம் இல்லையென்றாலும், ஜன சமூகத்தில் முதல்வருக்கு அடுத்தபடியாக கூடுதல் மதிப்பு அவருக்கு வழங்கப்படும். மூத்த தலைமுறையை அனுசரித்து செல்வதிலும், இளைய தலைமுறைக்கு தோள் கொடுப்பதிலும் உதயநிதி ஸ்டாலின் தனித்துவம் மிக்கவர். தனக்கு துணை முதல்வர் பதவி கிடைத்தாலும், அதை பதவியாக கருதாமல், தனக்கு கிடைத்துள்ள பொறுப்பு என அவர் உரைத்திருப்பது, மக்களுக்கு அவர் தொண்டாற்ற விழைவதை உணர்த்துகிறது. உதயநிதி ஸ்டாலினுக்கு அகிலேஷ் யாதவ் உள்ளிட்ட பல்வேறு அரசியல் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்து வரும் நிலையில், இந்திய அரசியல் களத்தில் இளம் தலைமுறைக்கான வாய்ப்புக்கள் பிரகாசமாகின்றன. திராவிட அரசியலின் நம்பிக்கை நட்சத்திரமாக உதயநிதி ஸ்டாலின் உருவெடுத்துவிட்டார் என்பதில் பெருமை கொள்வோம்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேனி வடக்கு மாவட்டம் - ஒன்றியம் - நகரம் - பேரூர்க் கழக

# மாணவரணி பொறுப்புகளுக்கு நேர்காணல்!

## மாவட்டக் கழகச் செயலாளர் தங்கதமிழ்செல்வன் எம்.பி. அறிக்கை !



தேனி, அக். 1-

தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தங்கதமிழ்செல்வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழகத்தலைவர்,தமிழ்நாடு முதலமைச்சர் அவகளின் வழிகாட்டுதலின்படி தேனி வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், கழக மாணவரணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் பொறுப்புக்கான நேர்காணல் 4.10.2024 வெள்ளிக்கிழமை காலை 9:00 மணி அளவில் தேனி என். ஆர். டி மண்டபம் அருகில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் எனது (மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச் செல்வன் எம்.பி.) தலைமையில் கழக மாணவரணி இணைச்செயலாளர் மோகன் மற்றும் மாணவரணி துணை செயலாளர் கோகுல் முன்னிலையில் நேர்காணல் நடைபெறுகிறது.

இது சமயம் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர,பேரூர் செயலாளர்கள், மற்றும் ஒன்றிய நகர பேரூர் கழக அமைப்பாளர் துணை அமைப்பாளர் பொறுப்புக்கு விண்ணப்பித்தவர்கள் தவறாமல் வருகை தந்து பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# நெல்லை மாநகரத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணி!

## மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் அறிக்கை!

நெல்லை. அக். 1-

நெல்லை மாநகரக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக்கழக செயலாளர்கள் வட்டக் கழக நிர்வாகிகள் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்.என நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

அடுத்த ஆண்டு 01.01. 2025 தேதியை தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் 29.10. 2024 அன்று வெளியிட உள்ளது.

29.10.2024 முதல் 28.11. 2024 வரை புதிய வாக்காளர்களை சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும்,திருத்தம் செய்யவும் மனு செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர தமிழ்நாடு மாநில தலைமை தேர்தல் அதிகாரி அவர்களால் அறிவிக்கப்பட்டு வார இறுதி நாட்களான சனி மற்றும் ஞாயிறு நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் சிறப்பு முகாம் நடத்தப்பட உள்ளன. மேற்குறிப்பிட்ட நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும் இடம் மாறிய வாக்காளர்களும் 01.01. 2025 அன்று 18 வயது நிரம்பக் கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்த படிவங்களை அந்தந்த முகாம்களில் கொடுக்க வேண்டும்.

இதன் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம்பெறாத பெயர்களையும், புதிதாக குடி பெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும்,வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும்,தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போது பட்டியலில் நீக்கவும்,தீவிர நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் அறிவுறுத்தலின்படி சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில் மாநகர கழக நிர்வாகிகள்,பகுதி கழக செயலாளர்கள்,வட்டக் கழக,மாநகர சார்பு அணிகளின் நிர்வாகிகள், மற்றும் பாக முகவர்கள் (BLA 2)ஆகியோர் இந்த சிறப்பு முகாமில் பொதுமக்கள் பயன்பெறும்படி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

## தேனி தெற்கு மாவட்ட அமைப்பாளர் நியமனம்

### சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு

தேனி தெற்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளராக நியமிக்கப்பட்ட தக்காளி எம்.ஹக்கீம் அவர்கள் பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டதால், அவருக்குப் பதிலாக, **எஸ்.முகமது யூனுஸ்**, (வார்டு 13- 4- 1, பழைய மருத்துவமனை சந்து, உத்தமபாளையம், தேனி மாவட்டம்.) அவர்கள் மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 30.09.2024

**டாக்டர் அ.சுபேர்கான்**
செயலாளர்,
தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

நெல்லை மாவட்டக் கழக முன்னாள் செயலாளர் டி.ஆர்.சுப்பிரமணியம் சகோதரர்

# கழக முன்னோடி டி. ஆர்.பிச்சை மறைவு!

## முன்னாள் அமைச்சர் ச.தங்கவேலு - கழகத்தினர் அஞ்சலி!

தென்காசி, அக். 1–

தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில் திருவேங்கடம் சாலையில் உள்ள கதவு எண் 106 ல் வசித்து வந்த முன்னாள் ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டக் கழகச் செயலாளர் மறைந்த டி.ஆர். சுப்பிரமணியம் அவர்களின் சகோதரர் கழக மூத்த முன்னோடியும்,0.996 நெசவாளர் கூட்டுறவு சங்க முன்னாள் தலைவருமான டி.ஆர்.பிச்சை முதலியார் (வயது 89) அவர்கள் வயது முதிர்வு காரணமாக அன்னாரது இல்லத்தில் 26.09.2024 அன்று மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

சங்கரன்கோவில் திருவேங்கடம் சாலையில் வசித்து வந்த ஒருங்கிணைந்த நெல்லை மாவட்ட முன்னாள் செயலாளர் மறைந்த டி.ஆர். சுப்பிரமணியன் அவர்கள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் மீதும் கழகத்தின் மீதும் அதிக பற்று கொண்டவர் ஆவார்.

அவரைத் தொடர்ந்து அன்னாரது குடும்பத்தினர் தொடர்ந்து இன்று வரை கழகத்திற்காக தங்களை அர்ப்பணித்து செயல்பட்டு வருகின்றனர்.என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இது பற்றிய தகவல் அறிந்ததும் முன்னாள் அமைச்சரும்,தலைமை செயற்குழு உறுப்பினருமான ச.தங்கவேலு,நகரச் செயலாளர் மு.பிரகாஷ்,மாவட்ட பொருளாளர் இல.சரவணன்,மாவட்ட பிரதிநிதி கணேசன்,சி.பி.எம்.மாவட்ட செயலாளர் முத்துப்பாண்டியன், அசோக்ராஜ்,உள்பட கழகத்தினர் பலர்

மறைந்த டி.ஆர்.பிச்சையா அவர்களின் உடலுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி

## தேனி தெற்கு மாவட்ட அமைப்பாளர் நியமனம்

### விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா, அறிவிப்பு

தேனி தெற்கு மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளர் கே.செந்தில்குமார் அவர்கள், மாவட்ட துணைச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டதால், அவருக்குப் பதிலாக **எஸ். பி.ஆரோக்கியசாமி**, (3-5, பாறை மேட்டுத் தெரு, உத்தமபாளையம், தேனி மாவட்டம்) அவர்கள் தேனி தெற்கு மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 30.09.2024

**அன்னியூர் சிவா,**
செயலாளர்,
தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி

தி.மு.க. வர்த்தகர் அணி

## திருவண்ணாமலை வடக்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்

### தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம் அறிவிப்பு

திருவண்ணாமலை வடக்கு மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட கே.எஸ். பாபு அவர்கள் மறைவெய்திய காரணத்தால் **வி.கோபு** (நெ. 82, சன்னதி தெரு, திருவோத்தூர், செய்யாறு வட்டம், திருவண்ணாமலை மாவட்டம்) அவர்கள் திருவண்ணாமலை வடக்கு மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாவட்ட வர்த்தகர் அணி நிர்வாகிகளுடன் இவர் இணைந்து பாணியாற்றுவார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 30.09.2024

**காசி முத்துமாணிக்கம்**
செயலாளர்,
தி.மு.க. வர்த்தகர் அணி

தி. மு. க. தொழிலாளர் அணி

## தேனி தெற்கு மாவட்ட அமைப்பாளர் நியமனம்

### தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அறிவிப்பு

தி.மு.க. தொழிலாளர் அணியின் தேனி தெற்கு மாவட்ட அமைப்பாளர் குரு.குமரன் அவர்கள் தலைமைச் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டதால், அவருக்குப் பதிலாக **கே.பவுன்ராஜ்** (மூலக்கடை அஞ்சல், கடமலைக்குண்டு வழி, ஆண்டிப்பட்டி தாலுகா, தேனி மாவட்டம்) அவர்கள் தேனி தெற்கு மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 30.09.2024

**பிடிசி ஜி.செல்வராஜ்,**
செயலாளர்,
தி.மு.க. தொழிலாளர் அணி



துணை முதல்வராக உதயநிதி ஸ்டாலின் பொறுப்பேற்றதற்குவாழ்த்து தெரிவித்து திண்டுக்கல் கிழக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் திண்டுக்கல் பேருந்து நிலையத்தில் கழகத்தினர் இனிப்புகள் வழங்கி, வெடி வெடித்து கொண்டாடினர். மாவட்ட அவைத்தலைவர் காமாட்சி, துணைத் தலைவர்கள் நாகராஜன் பிலால்உசேன், மேயர் இளமதி, பொதுக்குழு உறுப்பினர் அக்பர், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், வெள்ளிமலை, பகுதி செயலாளர்கள் ஜானகிராமன், இராஜேந்திரகுமார், பஜ்லுல்ஹக், மாநகர துணைச்செயலாளர் அழகர்சாமி, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், விவசாய அணி அமைப்பாளர் இல கண்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தி.மு.க. தொண்டர் அணி

## திருப்பூர் தெற்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்

### தொண்டர் அணிச் செயலாளர் பெ.சேகர் அறிவிப்பு

திருப்பூர் தெற்கு மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஆர்.சரவணகுமார், அவர் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டதால், அவருக்குப் பதிலாக **எ.முகமது அப்பாஸ் அலி** (302/6, வசந்தம் நகர், பைபாஸ் சாலை, தாராபுரம் - 638 657, திருப்பூர் மாவட்டம்) அவர்கள் திருப்பூர் தெற்கு மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 30.09.2024

**மாஸ்டர் பெ.சேகர்,**
செயலாளர்,
தி.மு.க. தொண்டர் அணி




கழக மாநில இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதல்வராக பொறுப்பேற்றுக் கொண்டார். தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் வடக்கு ஒன்றிய செயலாளர் எல்.எம் .பாண்டியன் ஏற்பாட்டில் பெரியகுளம் வடக்கு ஒன்றியத்தில் செயல்திட்ட குழு உறுப்பினர் எல்.மூக்கையா பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். உடன் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.